உ

சிவமயம்.

"துறவி"

மன்மத மலர் 1	திங்கள் வெளியீடு.	ஐப்பசி இதழ் 10

தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கம்,

திருவண்ணாமலை.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

பதிப்பாளர் :

சுவாமி சொருபானந்தா.

ஆண்டுக் கட்டணம் ரூ 2/- தனி இதழ் அணா 3/-

" துறவி "

பொருளடக்கம்.

ஓம்.

" துறவி "

மன்மத மலர் 1	தமிழ் திங்கள் வெளியீடு.	ஐப்பசி இதழ் 10

கடவுள் வாழ்த்து.

உண்ணுமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம் முழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.

" வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே "
—திருவாசகம்,

தமிழகத்தின் தவப்புதல்வர்

"பழநி. சாது சுவாமிகள்"

எந்நாட்டினும் சிறந்த நம் தமிழ் நாட்டிலே சைவமும் தமிழும் தழைத்தினி தோங்க சிவம் பெருக்கும் பிள்ளையார் திருவவதாரஞ் செய்தருளிய சீகாழிப்பதிக்கு அண்மையதும் திருஞானசம்பந்தப் பெருமான் சோதியிற் கலந்தருளியதுமாய திருநல்லூர்ப் பெருமண மென்னும் ஆச்சாபுரத்திலே நாடு செய்த நற்றவப் பயனாய் சைவ வேளாளர் மரபிலே திருவாளர் பொன்னுசாமி முதலியாருக்கும் திருவாட்டி காவேரி அம்மையாருக்கும் ஒரு திருமகவு தோன்றியது. தவங்கிடந்த தின்றமகவாதலின் நன்கு வளர்த்தார்கள். அம்மகவுக்குத் தாய் தந்தையர் சூட்டிய பெயர் **சபாபதி** என்னும் திருப்பெயராகும். அகவை ஐந்தானதும் பள்ளிக்குவைத்தனர். பள்ளிப் படிப்பினும், ஆலய வழிபாட்டினும், அடியார் உறவிலும் மிகப்பற்றுக்கொண்டனர் அச்சிறுவர். பின் இலக்கிய இலக்கண நூல்களையும் சைவ சித்தாந்த

நூல்களையும் தக்கார் வாயிலாகக் கேட்டுத்தெளிந்தனர். பின் காளைப் பருவம் நெருங்க நல்ல ஒரு கன்னிகையை நம் சபாபதியார்க்கு வாழ்க்கைத் துணைவியாக்கினர் பெற்றோர். **“பேரின்பமாக் கடலாடுவர் வீழ்பவோ பாரின்பப் பாழ்ங்கும்பியில்”** என்ற குமரகுருபாரின் அருண் மொழிப்படி அவர்களின் மனம் இல்லறத்திற் செல்லவில்லை. விளையும் பயிர் முளையில் தெரியும் என்பதை பாட்டாளி உழவன்தானே உணர முடியும். அதுபோல நம் சபாபதியாரின் எதிர்கால வாழ்க்கையை உணர்ந்தார் ஒரு பெரியார். அவர்தான் குருநந்தி பரம்பரையில் வந்த நந்திஅடி ஸ்வாமிகள் என்பார். அவர்கள் தரிசனார்த்தமாக ஆச்சாள்புரம் வந்தார்கள். அவ்வமயம் நம் சபாபதியைக் கண்டனர். அவர்களின் உள்ளக்கருத்தை உணர்ந்தார். உடனே உபதேசம் செய்து சில அருண் மொழிபகன்று நீ ஐந்து வீட்டில் பிச்சைவாங்கி உண்டு யாத்திரையாக வடக்கேயுள்ள சத்திய நாராயணத்துக்கு வாவெனக் கட்டளையிட்டுச் சென்றனர்.

பின் அவ்வாறே நம் அடிகளும் இல்லம் துறந்து வடயாத்திரை சென்று சத்தியநாராயணத்தை யடைந்து ஆசிரியரைக் கண்டு வணங்கி நின்றனர். ஆசிரியரும் நம்அடிகளின் அதிதீவிர பக்குவத்தையுணர்ந்து சந்நியாசங் கொடுத்து ஸ்ரீ அன்னபூரணியின் உபாசனையையும் உப தேசித்து நீ சிலநாள் காசியம்பதில் தங்கி உபாசனையைச் செய்து கொண்டிருவென கட்டளையிட்டனர். அவ்வாறே சில ஆண்டுகள் காசியம்பதியில் தங்கி சதா உபாசனை செய்து கொண்டிருந்து அவை கைவரப் பெற்று தென்னாட்டை யடைந்து ஞானசாரியரைக் கண்டு வணங்கிப் பணிபுரிந்து கொண்டிருந்தனர். ஆசிரியரும், வேதாந்தநூல் களையும், மந்திர, யந்திர, தந்திர நூல்களையும் பாடஞ் சொல்லக் கேட்டுத் தெளிந்தனர். பின்னர் ஸ்ரீ தேவி, முருகன் உபாசனைகளையும் உபதேசித்து நீ இங்கிருந்து பணி செய்வாயென கட்டளையிட்டு திருச்சிக்கடுத்த பெருவள நல்லூரில் சில நாளிலிருந்து விதேககைவல்லியம் எய்தினர்கள். அன்னாருக்கு நம் அடிகளார் செய்யவேண்டிய கிரியை முதலியனவும் சமாதிக் கோவிலும் மட்டும் கட்டுவித்து நித்ய பூசையும், குருபூசை முதலியதும் நடைபெற ஏற்பாடு செய்வித்துப் பின் பழநியில் இதுவரையிலும் இனிமேலும் நடைபெறாத அளவில் தண்டாயுதபாணிக்குச் சில ஆண்டுகள் மிகப்பெரிய அபிஷேகம் செய்வித்தும் நித்திய கட்டளையாக அபிஷேகத்துக்குப் பால், இளநீர், சந்தனம், பன்னீர், விபூதி முதலியதும் அலங்காரத்துக்குப் பட்டாடை, புனுகு, புஷ்பம் முதலியதும், நைவேத்தியத்துக்குப்பால் தேன், தினைமா, சுக்குச்சர்க்கரை முதலியதும் நிரந்தரம் நடைபெறும் படி செய்வித்தும் எத்தனை அடியார்களாயினும் ஏழைகளாயினும் இல்லையென்னாது உணவு, கஞ்சி முதலிய படைத்தும் தம்மையடைந்த அடியார் அன்பர் முதலானவர்கட்கு அவரவர்கள் மனோ நிலைக்குத் தக்கபடி ஞானம், யோகம், தியானம் செபம் பூசை முதலியவைகளை உபதேசித்தும் துறவிகள் தங்குவதற்குத் தனி

மடமும் கட்டு வித்தும், காளி, துர்க்கை, விநாயகர் தாயுமானார் கோவில்களும், பசுமடமும் அன்னதான சமாசமும், கட்டுவித்தும், அவை அவைகள் நீடு நிலைபெறத் தக்க ஏற்பாடுகளைச் செய்தும் இன்னும்பல அரிய பணிகளைச் செய்துகொண்டும் தவம், ஈகை, இரக்கம் அன்பு இவைகள் நிறம்பிய ஞானச்சித்தராய் விளங்கினார்கள்.

இவர்களின் அரும் பெரும் செயல்களைக் கூறவும் எட்டில் வரையவும் இயலாது ஆயினும் சிறிது விளக்கத்தோடும் அடிகளின் சரிதம் அச்சிட்டு இருக்கின்றனர் அதில் விரிவாய்க் காணலாம். உலகம் உய்ய அவதரித்த நம் அடிகளார் விகுருதி யாண்டு ஐப்பசித் திங்கள், திங்கட்கிழமை உத்திரம் கூடிய நன்னாள் காலை 9-மணிக்கு கை, கால், முகம் கழுவி நெற்றியில் நிறைய நீற்றைப் பூசிக்கொண்டு பழநிமலையை நோக்கி இருகைகளையும் குவித்து வணங்கி பதுமாசனத் திருந்து விதேக கைவல்லியம் எய்தினார்கள். பின் அடிகளாரின் உடம்மை சமாதிவைத்து பத்தாம் நாள் முத்திவழிபாடும் மண்டலாபிஷேகமும் நித்திய பூசையும் குருபூசை முதலியதும் பல அன்பர்களின் பொருளுதவியைக் கொண்டு தவத்திரு நாகப்பூர் சுவாமிகள் வெகு சிறப்பாக நடாத்திவைத்தும், நடாத்தியும் வருகிறார்கள். இச் சிறிய கட்டுரையை அடியேனது அன்பின் பெருக்கால் இத்துறவி இதழில் வெளியிட்டனன் அன்பர்கள் குணம் காண்பாராக.

—பதிப்பாளர்.

அறிவிப்பு.

"துறவி" இதழ் ஒவ்வொரு தமிழ் தைத்திங்கள் தொடங்கி மார்கழிமுடிய ஓராண்டு நிறைவெய்துவதாகும். துறவிகள், அன்பர்கள் அனைவரும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரிக்கும்படி வேண்டுகின்றோம். ★ ஆண்டு சந்தா ரூ. 2

"துறவி" செயல் நிலையம்,
கீழ்ப்பாலூர் அஞ்சல்.
கலசபாக்கம் (வழி) போளூர் வட்டம், வடாற்காடு,

பொருள்.

தவத்திரு. ஐயாறு அடிகள்
(சித்தபாலைய தேசிகர் ஆதீனப் புலவர், அடிவாரம், பழநி.)

முன் (ம 1 இ 8 ப 119) தொடர்ச்சி.

கேள்வியினாலே செவிகளுக்குத் துளையிடுதல் வேண்டும். புறத்தேயுள்ள ஓசையைக் கேட்பதாயிருப்பினும் கேள்வியால் துளைக்கப்படாத செவிகள் கேளாத்தகையனவே. நல்லறிவும், நற்குணமுமுடைய நல்லோரிடத்தே சென்று கேட்பின் அக்கேள்வியானது வழுக்கு நிலத்திலே செல்லவேண்டிய ஒருவன் வழுக்கிக் கீழே விழாதிருக்க உதவும் ஊன்றுகோலை ஒத்ததாகும். எந்த வகையாலும் ஒவ்வொருவரும் சிறந்த நூற்பொருள்களையே கேட்டல் வேண்டும். அங்ஙனம் கேட்பின் கேள்வியாளர்கட்கு அக்கேள்வி நிறைந்த பெருமையைத் தருவதாகும். செவிச் செல்வமே ஏனைய செல்வங்களைவிடத் தலையாய செல்வமாகும். கற்றல் கேட்டல் என்ற இரண்டும் உடையரே உயர்ந்தோர்' கற்றல் கேட்டல் உடையார் பெரியார்'' —திருஞானசம்பந்தர்.

கல்விச் செல்வத்தாலும் கேள்விச்செல்வத்தாலும் ஒருவன் அறிவுச்செல்வத்தை யடைவான். நல்லது இன்னது, தீயதின்னது என்று பிரித்தறிவது அறிவு. மனத்தைச் சென்றபடி செல்லவிடாமல் நன்னெறிக் கண்ணே செலுத்துவதுதான் அறிவு. எந்தப் பொருளை யார் யார் கூறக்கேட்பினும் அந்தப்பொருளின் மெய்ப்பொருளைக் காண்பது அறிவு. உலகம் தழுவியதே ஒள்ளிய அறிவு. ஆன்றோர் சென்ற நெறிப்படி செல்லவல்லது அறிவு அறிவுடையரே ஆகவேண்டிய அதனை அறியவல்லவர். அறிவுடையரே எல்லாம் உடையவர். அறிவு இல்லாதவர் என்னதான் செல்வமுடையரேனும் இல்லாதவரே அறிவுச் செல்வம் இல்லாமல் செல்வத்தை மட்டும் உடைய ஒருவன் ஆசை மிகுதியால் தானும் போதிய அளவுண்ணானாய் நல்ல உடைகளையும் உடானாய் பிறர்க்கீந்து புகழையும் தேடானாய் இல்லாத ஒருவனையே ஒத்தவனாகின்றான்.

"நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை பண்ணப்பணைத்த பெருஞ் செல்வம்'' —நாலடியார்.

அஞ்சவேண்டியதற்கு அஞ்சுதலே அறிஞர் தொழிலாகும்.

"கற்பக் கழிமடமஃகும் மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணரும் கோளுணர்ந் [தால்
தத்துவமான நெறிபடரும் அந்நெறி
இப்பாலுலகத் திசைநிற்றி உப்பால்
உயர்ந்த உலகம் புகும்"

அறிவாகிய பெரிய செல்வமே தமக்கு அருள் வேண்டும் என்றும் ஆன்றோர் பலரும் கடவுளை வேண்டுவர். உண்மையின்னது இன்னதென்றுணரும் உணர்வுண்டாமேல் அவ்வுணர்வு தத்துவ நெறிக்கண்ணே செலுத்தும். அந்நெறி இம்மையில் புகழையும், மறுமைக்கண் பேரின்ப உலகையும் அளிக்கும். அறிவு கண்ணாற் காண ஒண்ணாதது. அறிவுடையன் என்பதை அறிவிக்கும் அடையாளம் அன்பும் அருளுமேயாகும். உலகிடை அறிவு வளர்ச்சி மட்டும் போதாது. அன்பும் அருளுமாய பண்புகள் வளர்தல் வேண்டும்.

"அன்பும் அருளும் அறிவுக் கடையாளம்
என்பர் சிவன்வாக் கீண்டு" —சைவ சமய நெறி.

அரம் போன்று கூரிய சீரிய நுண்ணறிவாகிய செல்வம் உடையராயினும் மக்கட்குரிய அன்பும் அருளுமாகிய நற்பண்புகளில்லார் மரத்தையே ஒப்பர். நண்பு செய்யாதவராய் நன்மையல்லாமல் தீமையையே தமக்குச்செய்பவர்களிடத்தும் அன்பும்அருளும் உடையராதல் வேண்டும். பண்பு இல்லாதவன் பெற்ற பெரிய செல்வம் நல்ல பாலானது கலத்தின் தீமையால் மாறுபட்ட தன்மையை ஒத்ததாகும். அன்பாவது அருளுக்கு முதலாய் மனத்தில் நிகழும் நேயம். உள்ள நெகிழ்ச்சி. தொடர்புடையாரிடத்துச்செல்லும் விருப்பத்தை அன்பு என்பர் ஆன்றோர். எல்லா உயிர்களிடத்தும் விருப்பத்தை அருளென்பர். அன்பு, அருள் என்பன கடவுளது வடிவங்கள். அருட்செல்வம் செல்வத்துளெல்லாம் சிறந்த செல்வமாகும். அச்செல்வம் ஆன்றோரிடத்தே தான் பொருந்துவதாகும். அருட்செல்வம் உடைய ஒருவற்குச் செம்பொருள் எளிது.

செம் பொருளினைக் காண்பதுதான் சிறந்த அறிவு. நமது திருவள்ளுவதேவர்

"சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு"

என்று அருளினர் செம்பொருளினைத்தான் மெய்ப்பொருள் என்பர் மேலோர். செம்மை-பொருள். செம்பொருள். செம்மையாகிய பொருள் நேர்மையாய பொருள். செம்மையென்பது செந்நிறப் பண்பையும், நேர்மைப் பண்மையும் குறிப்பிடுவதாகும். "செம்மையே யாய சிவ பெருமானே" என்றும் "செம்பொருட்டுணிவே" என்றும்ம ணிவாசகப்

[137-ம் ப. பார்க்க

சைவசித்தாந்தம்.

சிவஞான போதம்.

அருட்டிரு. திருநீ. சண்முகானந்த சுவாமிகள்,
(ம து ரை.)

முன் (ம 1 இ 9 ப 123) தொடர்ச்சி.

அற்றேல் சுட்டுணர்வாகிய உலகு பல வாயினாற்போல சுட்டுணர்வின்றி நின்ற சங்காரமும் பலவாகுமன்றே! ஒன்றே என்பதென்னை அதுவுமன்றிச் சுட்டுணர்வினராகிய ஆன்மாக்கள் முத்தியிற் சிவசமமாவரெனக் கூறுதலின் அவித்தை நீங்கிய பின்னர்ச் சுட்டுணர்வின்றி நிற்பராகலின் அவரும் முதற்கடவுளராவரன்றே எனின்:- அற்றன்று காரியப் பிரபஞ்சஞ் சடமாகையாலும், சேதனப் பிரபஞ்சம் அவித்தையாற் கட்டுற்றுச் சுட்டுணர்விற்றாய் நிற்றலானும், இவற்றைச் செயற்படுத்தற்கு இவற்றின் வேறாகிய முதற்கடவுளுண்டெனவும் உலகு விசித்திர காரியமாய்க் காணப்படுதலின் இவ்வாறு நடாத்தும் முதற்கடவுள் முற்றுணர்வும் அளவிலாற்றலும் பேரருளும் சுதந்தரமும் ஆகிய அதிசய குணங்களுடையன் எனவும், இத்தன்மையனாகிய முதற்கடவுளொருவனே அமையுமாகலின் வேறும் அத்தன்மையர் உளரெனக் கொள்ளின் மிகையென்னுங் குற்றமாமெனவும் பலவாறான விருள் நீங்கிய விடத்தும் கண்ணுக்குக் காட்சி ஞாயிற்றை யின்றி யமையாதவாறுபோல மலம் நீங்கிய முத்தி நிலையினும் ஆன்மாக்கட்கு அறிவு உடன் நின்றறிவிக்கும் முதல்வனையின்றி யமையாதெனவும் முதல்வன்போல் ஐந்தொழிற்கும் வினைமுதலாம் உரிமையின்றிச் சிவாநுபவ மொன்றிற்கே ஆன்மாக்கள் உரியன வெனவும், சம வியாபகமாயினும் முதல்வனை நோக்கத் தூலவறிவாகலான் விளக்கொளியுட் கண்ணொளிபோல முதல்வனிடத்து வியாப்பியமாம் எனவும் கண்டு கொள்க.

அற்றேல் முத்திநிலையில் ஆன்மா சிவமாம் என்னுஞ் சுருதிக்குப் பொருள் என்னை எனின்;- அதனை உண்மை யதிகாரத்துட் கூறுதும். இதனானே முத்திபெற்றோரும் முதற் கடவுளாவரென்னும் சிவசமவாதி, சங்கிராந்த வாதி, உற்பத்திவாதி, ஆவேசவாதி முதலியோர் மதமும் மறுக்கப்பட்டவாறும் யூகித்துணர்ந்துகொள்க.

இனி இம்முதற் சூத்திரத்து மூன்றதிகரணங்களாற் போந்த தொகைப் பொருளாவது:-உற்பத்தி நாசங்களதுண்மை காட்சி முதலிய பிரமாணங்களால் அறியவாராமையிற் பிரபஞ்சம் நித்தப் பொருளே யெனவும் அன்றித் தோன்றியழியுமெனக் கொள்ளினும் இல்பொருள்

தத்தஞ்சாற்பிற் றேன்றிநின்றழிதல் இயற்கையெனவமையும், செய்கை யென்றற்கு ஓரேதுவில்லையெனவும், உள் பொருளாயின் அதுவே யமையும் இறைவன் வேண்டா வெனவும், இரண்டுள் பொருள் கோடல் மிகையாம் எனவும், இறைவன் வேண்டுமாயினும் திருமால் முதலிய கடவுளரில் ஒருவனேயமையும், அவரை யொழித்துச் சங்கார கருத்தாமுதற்கடவு ளென்றற்குப் பிரமாணமில்லை யெனவும், பிரமாணமுண்டாயினும் அதிவிசித்திரமாய வுலகம் ஒருவருற் செய்தல் கூடாமையின், மற்றும் அவ்வியல்பினராய கடவுளர் உளராதல் வேண்டுமெனவும், உலகாயதர், மீமாஞ்சையர், புத்தர், சமணர், சாங்கியர், பாஞ்சராத்திரிகள், அநேகேஸ்வரவாதிகள், மதம்பற்றி பூர்வ பக்கம் நிகழ்ந்தவிடத்து அவரை மறுத்து, உற்பத்திநாசங்கள தன்மைக்கு, சத்தஅநுமான பிரத்தியட்சப் பிரமாணங்க ளுள்ளனவாகலின் பிரபஞ்சம் நித்தப் பொரு ளன்றெனவும், அன்ருகவே இல்பொருட்கு முயற்கோடு போல உற்பத்தி நாச மின்மையானும், தோற்ற வொடுக்கங்கட்குக் காரணமாய மூலமல மொன்றுண்டாகலானும், உலகு உள் பொருளென்பதும், தோன்றி யொடுங்குதல் செயற்கை யென்பதும் பெற்றும்; பெறவே உள்பொருட்குக் குடமுதலியன போலச் செய்வோரையின்றிச் செய்தொழிற்பாடு இன்மையாற் கருத்தாவுண்மை பெறப்பட்டது; படவே முழுவதும் ஒடுக்கின சங்கார கருத்தாவே முத்தொழிற்கும் கருத்தாவா மெனவும், ஏனையோரெல்லாம் அவ்விறைவனுக்குத் தொழும்ப ராதலேயன்றி முதற் கடவுளாகா ரெனவும், சித்தாந்தஞ்செய்து அநுமானப் பிரமாணத்தால் முதற்கடவுளதுண்மை பொதுவகையானுஞ் சிறப்புவகையானுங் கூறி வாறென்றுணர்க. இங்ஙனம் மூன்று அதிகாரணமும் ஒன்றற்கொன்று ஏதுவும் பயனுமாய் ஒரு பொருள்மேல் வந்தவாறுங் கண்டுகொள்க. இக்கருத்துப் பற்றியன்றே:—

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு" —என வள்ளுவனாரும்
"அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து" —என உமாபதி

யாரும் திருவாய் மலர்ந்தருளியதூஉம் என்க.

இரண்டாஞ் சூத்திரம்.

அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே —என வரும்

முதற் சூத்திரத்து மூன்றுமதி கரணத்து உத்தேசமாய் அந்தம் என்று எடுத்துக்கொண்ட இறைவனுக்கு இலக்கணங்கூறு முகத்தானே, துணைக்காரண முதலியன வின்மையின் நிமித்தகாரணன் இறைவன் என்றல் பொருந்தாதென்னும் ஆசங்கையை நீக்கி, உலகம் ஒடுங்கியினின்றும் மீளஉளதாமாற்றை வகுத்துணர்த்துதலும், "ஒடுங்கி

யுளதாம்'' என்ற வழி மீளவுளதாவது எவ்வாறு என்று அவாய் நிற்றலின் அதுபற்றி இரண்டாமுற்பவம் வருமாறுணர்த்துதலும், பிரமாணவோத்தின் இரண்டாம் பாதமாகிய இவ்விரண்டாஞ் சூத்திரக் கருத்தாம். இதனனே, உத்தேசங்கூறிய பின்னர் இலக்கணங் கூறு-தலாகிய முறைமை பற்றிய சம்பந்தத்தால் அதிகரண சம்பந்தமும், அவாய் நிலைப்பற்றிய சம்பந்தத்தால் பாதத்தின் சம்பந்தமும் ஆசங்கை பற்றிய சம்பந்தத்தால் ஒத்தின் சம்பந்தமும், அமையுமாறு கண்டு கொள்க அற்றேல், அந்தம் என்றது உத்தேசமாயின் அல்லவா அதன்பின் இலக்கணங்கூறல் முறைமைபற்றிய சம்பந்தமென்பது பொருந்தும். பெயர் மாத்திரையாற் பொருள் புலப்படச் சொல்லுதல் உத்தேசமென்பது நியாய நூலார் துணிபாகலின், ஈண்டு அந்தம் என்பது ஆதியென்பதனல் விஷேடிக்கப்படுதலானும், வாளா பெயராய் நில்லாது அந்தத்தைச் செய்யுங்கடவுளெனக் காரணக்குறியாய் மற்றையோரிற் பிரித்து இலக்கணந்தோன்ற நிற்றலானும், உத்தேச மென்றலமையாதெனின்:- அற்றன்று, சிவப்பிரகாசத்துள் ''பலகலை யாகமவேதம் யாவையினுங் கருத்துப் பதிபசுபாசந் தெரித்தல்'' என்ற வழிப் பதிபசுபாச மென்னும் உத்தேசம், தெரித்தலை விஷேடித்து நிற்பதாலும், ஞானமிர்தத்துள் "பாசத்தொடு பதியாய் பெற்றி'' என்றவழி ஆய்தற்குச் செயப்படு பொருளாய் விஷேடிக்கப் பட்டு நிற்பதாலும், இங்ஙனம் விஷேடித்தாவது விஷேடிக்கப்பட்டாவது நிற்பதன்றி வாளா நிற்றல் யாண்டு மின்மையான், பிற்கூறப் படுவதாய இலக்கணத்தை அவாய் நிற்பதாய் எடுத்துக் கோடலே உத்தேசமெனப் படுமாகலின் ஈண்டும் அந்தமென்றது உத்தேசப் பொருளேயாம் என்று கொள்ளுக.

அற்றேல் அங்ஙனமாக, பிரமாணவோத்துள் இலக்கணங் கூறுதல் முறையாமாறென்னை எனின்:- மேலைச்சூத்திரத்தான் நிமித்த காரணமுண்டெனப் பிரமாணங்கூறி, ஈண்டுத் துணைக்காரண முதற் காரணங்களு முண்டெனப் பிரமாணங் கூறத்தொடங்கிய ஆசிரியர், அவ்விரு காரணங்களும் நிமித்த காரணனுகிய இறைவனுக்குக் குண மும் உடைமையுமாய் இலக்கணக் கூற்றின் அகப்பட்டு நிற்றலின் வேறு கூறலாகாமையின் இலக்கணமும் உடன் கூறினர்.

அவ்விலக்கணம் பொதுவுஞ் சிறப்புமென விருவகைத்து, மேகபடலத்தின் மறைந்து சிறிதே தோன்றும் இருநாட் பிறையைக் காணுவார்க்கு மரத்தின் நுனிக்கொம்பிற்றோன்றுவது திங்களென்றல் பொதுவியல்பு. அதுகொண்டு ஆண்டு உற்று நோக்கியவழி ஒளி மிகுத்துத் தண்ணென்ற கிரணங்களையுடையது திங்களென்பது சிறப்பியல்பு. இங்ஙனம் பொருள்தோறும் வருமாறு கண்டுகொள்க. அஃது அங்ஙனமாக, முதலுற்பவம் வருமாற்றைக் கூறுறு இரண்டா முற்பவம் வருமாற்றைக் கூறியதென்னை? எனின்:- உலகம் அநாதியா கலின் அம்முதற்கோடி சிற்றறிவுஞ் சின்னுளும் பல்பிணியுமுடைய

நம்மனோரால் அறியவாராமையாலும் ஒடுங்கியின்மீள உளதாமாறே ஈண்டு அவாய் நிலையான் உணர்த்தவந்த தாகலானும், அவ்விரண்டா முற்பவமே கூறினர். அற்றாயினும் முதலுற்பவம் ஆமாறிவ்வியல் பினை யுடையதென்பதை யுணரவேட்கையுண்டாயின், "பொற்புடைய மாயைப் புணர்பின்கண்-முற்பாற்-றநுகரணமும் புவனமுந்தந்தவற்றான் மனமுதலாய் வந்த விகாரத்தால்-வினையிரண்டுங்-காட்டி" எனவரும் போற்றிப் பஃறொடை அடிகளால் உணர்க. மேலும் "விச்சதின் றியே விளைவு செய்குவாய்" எனவும் "விண்ணு மண்ணகமுழுதும் யாவையும்—வைச்சுவாங்குவாய்" எனவும் வரும் மணிவாசகத்தான் இவ்விரு வேறுற்பவமும் போந்தவா றுணர்ந்து கொள்க.

KOVILOOR MADALAYAM

இனிச் சூத்திரப்பொருள் வருமாறு;—

முதற் சூத்திரத்திற் சித்தாந்தஞ் செய்த சங்காரகாரணனாகிய சிவபெருமான், அவையே ஆய்—அவ்வான்மாக்களேயாய், தானே ஆய்—அவ்வான்மாக்களுக்கு வேறுமாய். அவையே தானேஆய்—உடனுமாய்(நின்று)ஆணையின்—தமது ஆணையினால் (ஆணையென்னும் பரியாயப்பெயருடைய சிற்சத்தியால் வரும்) இருவினையின்—(நல்வினை தீவினைகளென்னும்) இருவினைகளால், போக்கு வரவு புரிய—அவ்வான் மாக்கள் இறத்தல் பிறத்தல்களைப் புரியும்வண்ணம், ஆணையின்—அவ் வாணையினின்றும், நீக்கமின்றி-பிரிப்பின்றி, நிற்கும்-நிற்பன். (எ. று.)

(தொடரும்)

133-ம் ப, தொடர்ச்சி

பெருமான் சிவபெருமானை விளித்தமை காண்க பண்பு ஒரு பொருளைச் சார்ந்தே நிற்றல் வேண்டும் தனித்து நிற்க இயலாது. பண்பினையுடைய பொருள் பண்பி. செம்மைப் பண்பினையுடையோன் சேயோன். நமது ஆன்றோர் கடவுளைச் சேயவன், சேயோன் என்றே அழைத்தனர். ஒளியினாலே தான் இருளகலும் விளக்க முண்டாகும். ஒளிவடிவே என்று கடவுளை ஆன்றோர் பலரும் அழைத் தனர், "ஒளிவளர் விளக்கே" திருவிசைப்பா. "சோதியே சுடரே சூழொளி விளக்கே" —திருவாசகம். நமது திருவாதவூரடிகள் திருவாசகம், திருச்சதகம், 67-ம் திருப்பாடலில் "செம்பிரான்போற்றி" என்றும், வாழாப்பத்தில் "செம்பெருமானே" என்றும். தசாங்கத்தில் "செம்பெருமான்" என்றும் குறிப்பிட்டிருத்தல் காண்க. பண்டைக் காலத்தவர்கள் கடவுளைச்சேயோன், மாலோன், முருகன், பழையோன் தொல்லோன், சிவன், இயவுள், என்றெல்லாம் வழங்கி வழிபட்டனர். "சிவனெனு நாமந் தனக்கேயுடைய செம்மேனி யம்மான்" என்றனர் நமது தாண்டக வேந்தர். செம்பொருளை யுணர்ந்து அவா அறுத்து பேரின்பப் பெருவாழ்வு எய்தலே மக்கட் பிறப்பானபயன்.

(தொடரும்)

அவிரோத வுந்தியார்.

தவத்திரு சுவாமி முக்தானந்தா அவர்கள்
(சங்கமூர்த்தி, ஆனந்தாஸ்ரமம், வியாசர்பாடி, சென்னை.)

முன் (ம 1 இ 9 ப 1:4) தொடர்ச்சி

மெய்யுணர் வுடையோன் இயல்பு கூறல்.

உடம்பையும் உட்கருவியையும் யானென்று கொள்கின்றனர் அங்ஙனமே, இவ்வுலகையும், இதில் நுகரப்படு பொருள்களையும், எனதென்று கொள்கின்றனர் இங்ஙனங் கொள்வது பிரித்தறி விலாமையே, இதனாலேயே உண்மை உணர்வைப்பெற முட்டுப்படுகிறது. இத்தகைய முட்டுப்பாட்டைத் தட்டி முறித்து இதினின்று விடுபடல் வேண்டும். கானவர் வலையிற் பட்டுக்கைதப்பி ஓடும் மான்போல, ஓடுதல் வேண்டும். உண்மையுரைக்கும் நல்லாசிரியரைத் தேடுதல் வேண்டும், கண்டவுடன் கள்ளமின்றிய உள்ளத்துடன் தலைமுதலாய எட்டுறுப்பும் மண்புறளப் பணிதல் வேண்டும் இருவென்ற கட்டளை எழும் வரை, நிற்றல் வேண்டும். மாயவாழ்வெனும் மோகத்தால் வருந்தினேன் ஐயனே என்று அழுதல் வேண்டும். அப்பொழுதே ஆசிரியர் திருவுளம் இரக்கங் கொண்டிளகும். அருள் பொங்கி உண்மையிது இன்மையிது வென்று உரைப்பார்கள். உரைத்த வண்ணம் உட்கொண்டு, நிற்பதே பிரித்தறிவுடைமை, இதனாலேயே மயக்கம் ஒழியும். இம் மயக்கம் ஒழிந்தவனே மெய்ந் நிலையில் நிற்பன். இவனே மெய்யுணர் வுடையோன். இவனையேமெஞ்ஞானி என்று நூல்கள் கூறுகின்றன, என்பதனை, அவிரோத வுந்தியார் தெளிவிப்பது காண்பாம்.

10 அ, உந்தியார்:—

யானென தென்செருக் கீர்த்த மகனேமெய்ஞ்
ஞானியென் றோதிய உந்தி பற
நான்மறை யாதிய உந்தி பற

பொழிப்பு:— நான் மறை யாதிய நூல்கள், யான் எனது என்னுஞ் செருக்கை யறுத்துள்ள மகனையே, மெஞ்ஞானியென்று ஓதியுள்ளன; எனக் கூறிக்கொண்டே உந்திப் பறவுங்கள்.

பொருள்:—'நான்மறை'=நான்கு மறைகளும், ஆதிய=(அம் மறைப் பொருளை விளக்கியும் விரித்தும உரைக்கின்ற உப நிடதம், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி) முதலிய நூல்களும், 'யான் என்' = (குறித்தறியப் டொருளல்லாத உடம்மை) யான் என்றும், 'எனது என்'=(இவ்வுடம்பிற்குப் புறம்பான இடம், பொருள், ஏவல் முதலியவற்றை) எனது என்றும், (உள்ள) 'செருக்கு=(எண்ணுதற்கும் இசைத்தற்கும் அடிப்படையாயுள்ள) மயக்கத்தை, 'ஈர்த்த

மகனே=அறத்துள்ள மனிதனே, 'மெய்ஞ்ஞானி என்று'=(ஆத்ம ஞானமாகிய) மெய்யறிவுடையோன் என்று, 'ஓதிய'=கூறியுள்ளன. (என்று சொல்லிக்கொண்டே) 'உந்தீபற'=உந்திப்பறவுங்கள் (சிறுமியர்காள்) உந்திப் பறவுங்கள் (என்பதாம்)

இக்கருத்துக் கொண்ட எடுத்துக் காட்டுகள்:—

திருவள்ளுவர் :—

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்". (எம்)

திருவாய்மொழி:—

"நீர்நும தென்றிவை—வேர்முதன் மாய்த்திறை
சேர்மி னுயிர்க்கது—நேர்நிறை யில்லே" (எம்)

பிரபுலிங்கலீலை :—

"யானென தென்ப திருந்திடு காறும்
ஞான முறுனது நண்ணில னுயில்
தானில்லை யாத சகந்திகழ் கிற்கும்
தீனமி லாத சிவந்திக ழாதே" (எம்)

உபதேச விளக்கம் :—

"தேகாதி நானல்ல வென்றறிந்தால் சித்தமயல்
போகாத தென்னையோ புண்ணியா—தேகாதி
தன்னளவே அம்மயக்கம் சத்தியமாய் எப்பொழுதும்
உன்னளவே இல்லை யுணர்" —என்பதுங் காண்பாம்.

யானென தென்றல் யாதினை யாதினை யெனல்.

உடல், கருவி, இடம், நுகர்வு, இந்நான்கே; தனு, கரண புவன, போகம் எனப்படுவன. இவற்றுள் கருவியென்பதற்கு, உட்கருவி புறக்கருவி யிரண்டுங் கொள்ளத்தக்கன. வாள் உறையிலடங்குவது போல், கருவி உடம்பிலடங்கியது இடமோ? நுகர்வினும் வேறாகாதது; ஆதலால், இந்நான்கையும் இரண்டாகக் கொள்ளலே அமையும் இங்ஙனமே கொள்ளுகின்றார்கள். இவ்வாறு, இரண்டெனக் கொள்ளக் கிடக்கினும், உலகமென்ற பெயரால், ஒன்றாகவே கருதவுங் காணவுந் தகுமென்பது கண் கூடு.

இந்த உலகம், ஐம்பூதங்களின் கூட்டுறவே. இதிலுள்ள ஒவ்வொரு பொருளும், தனித்தனி ஐம் பெரும் பொருள்களின் சேர்க்கைதான். உயிரினங்களின் உடல்களும், இவ்வியல்பாய் அமைதல் கூடுமேயன்றி, மாறுபட அமைதல் கூடாதென்பதே ஒருதலை.

(தொடரும்.)

'என் கடன் பணி செய்து கிடப்பதே'

(திரு. சுவாமி வடிவேலனார், குடியாத்தம்.)

முன் (ம 1 இ 9 ப 126) தொடர்ச்சி.

இதனால் இறைவன் கடமை எல்லா உயிர்களோடு ஒன்றுக்கும் பற்றுத சிறியேனையும் தாங்குதல். அடியேனுக்குக் கடன் பணி செய்து ஒன்றுக்கும் பற்றுத நிலையில் இருப்பது என்பதாகும். சுவாமிகள் தம் நிலையில் தமக்காகக் கூறியதாயிருப்பினும் நமக்குக் கூறியதாகக் கொள்ளவேண்டும் என்று முன்னே விளக்கியிருக்கின்றே மாதலால் அந்தக் கடமையை நாம் ஒவ்வொருவரும் எவ்வாருகச் செய்யவேண்டுமென்பதுபற்றி ஆராய்வாம்.

உலகம் முழுவதுக்குமே பணிசெய்வது எல்லாராலும் செய்யக்கூடிய காரியம அன்று, ஆதலின் முக்கியமாகவும், முடியச்கூடியதாகவும் சிலவற்றை வகுத்துக் கொண்டு மேற்கொள்வதுதான் நல்லது.

தாய் தந்தையர்.

முதலாவதாகச் செய்யவேண்டிய பணி, உலகிற் ரேன்றிய நமக்கு முன்னறி தெய்வமாகவுள்ள தாய் தந்தை இருவருக்கும் செய்யும்பணியாகும். பிள்ளை என்று ஈன்ற நாள்முதல் நம்மை விட்டுப் பிரியும் நாள்வரை நமக்காகத் தன்னலம் விட்டுச்செய்த பணிகள் ஒவ்வொருவர் அனுபவத்திலும் தெரிந்ததேயாமாதலின் விரித்து எழுதவேண்டிய அவசியமில்லை. அதிலும் தந்தையை விடத் தாய்க்குத்தான் உரிமை அதிகம் உண்டு. முதலில் தந்தையை இன்னர் என்று தாய்தான் நமக்குக் காண்பிக்கின்ருள், வளர்க்குங் காலத்திலும்கூட தந்தையைக்காட்டிலும் தாய்க்குத்தான் அதிகமான பணி இருக்கிறது. ஆதலினற்ருன் துறவடைந்தானுயின் தந்தையால் வணங்கப்பெறுகின்ருன். ஆனல் துறவடைந்த நிலையிலும் கூடத் தாயை வணங்க வேண்டியவனுகின்ருன். இவ்வாறு விதி நூல்கள் கூறுகின்றன.

முன்னறி தெய்வமாக விளங்கும் அன்னைக்கும் அத்தனுக்கும் தத் தம் பொருள் வசதிக்கேற்ப அன்ன வஸ்திரங்களிற் குறைவுபாடுருதவண்ணம் காப்பாற்றுதல் வேண்டும். அவர்கள் அறிவின் குறைவாலோ, பிறர் தூண்டுதலாலோ நமக்கு இடுக்கண் உண்டாகும் வகையில் நடக்கவும் கூடும். அக்காலத்து அதற்காக அவர்கள்மீது வெறுப்புருமல் இனிய வார்த்தைகள் கூறித்திருத்துதல் வேண்டும்.

அதனைக்கேளாவிடத்துத் தக்கார் வாயிலாகச்சொல்லி அவர்களால் திருந்தும்படிச்செய்தல் வேண்டும். ஒன்றினும் திருந்தாவிடத்தும் அதற்காக அவர்களைக் கடுஞ்சொற்களால் கடிந்துரைத்தல் கூடாது. நம் வினையை நோக்கி வருந்துதல் வேண்டும். கோபத்தினல் அடித்தும் வைதும் தொந்தரவு செய்தால் நம்மைப் பெற்று வளர்த்த நன்றி மறந்தவர்களாவோம். அப்பாவம் நம்மைத் தொடரும்.

சிலர் தம் மனைவிமீது பாசம் உடையவராய் அது காரணமாக அவர்கள் கூறும் வார்த்தையையே பெரிதாக மதித்து அவர்கள் கருத்துக்கிணங்கித் தாய் தந்தையரை நிந்தை வசனத்தாலும் வேறு பல வகைகளினுலும் துன்புறுத்துகின்றனர். தாய் தந்தையர் நமக்கு எவ்வளவுதான் கேடு செய்தாலும் அவைகளைப் பொறுத்துக்கொள் ளாது மாறுகொண்டு துன்புறுத்த முற்படின், நம்மைப் பெற்று அன்போடு வளர்த்த செய்ந்நன்றி மறந்தவர்களாவதே யன்றி பெண் வழிச்சேறல் எனனும் குற்றத்தையும் அடையவேண்டி வரும், இவையிரண்டும் ஆசிரியர் திருவள்ளுவரால் குற்றம் என்று கடிந் தொதுக்கப்பட்டவையேயாம். ஆதலின் இவை இம்மட்டில் நிற்க.

ஆசிரியர், தெய்வம்.

இவர்கட்குப்பின் அவர்களால் நமக்கு அறிவிக்கப்பட்ட தெய்வமாகக் கொண்டாடத்தக்க எழுத்தறிவித்த இறைவனுகிய ஆசாரியனுக்கும், கடவுளுக்கும் நாம் பணிசெய்ய வேண்டுவது இன்றி யமையாததாம். கடவுட்குப் பணியியற்றுதலை எவரும் மறுக்க-மாட்டார்கள், ஆசிரியர்க்கியற்றும் பணியை அவரவர்கள் வாழ்விற் கியைந்த முறையில் ஊகித்தறிந்து செய்யலாம்.

உறவினர்-

இதன் பின்னர் நாம் செய்யவேண்டுவது நம்மைச்சார்ந்து நமக்கும் நம் குடும்பத்துக்கும் அவ்வப்போது வேண்டும் உதவிகளைச் செய்து நம் வாழ்வில் தொடர்புடையவராய் விளங்கும் சுற்றத்தார் கட்கு வேண்டும் உதவியை வசதிக்கேற்பவும் சமயத்திற்கேற்பவும் பணிபுரிதல் வேண்டும். பொருள் வசதியில்லாதவர் மனம், வாக்குக் காயம் என்பவற்ருலாவது இயன்ற அளவு பணிபுரிதல் வேண்டும்.

தேசப்பணி.

இவைகள் எல்லாவற்றினும் உயர்வுடையது நாம் பிறந்த தேசத்துக்கும் தேசமக்கட்கும் நலம் பயக்கக்கூடிய பணிகளைச் செய்வ தாம். இவைகட்கு நம்மை எப்பொழுதும் தயார் செய்து வைத்துக் கொண்டு எவ்வப்போது எவ்வெப்பணி புரியவேண்டிய அவசியம்

ஏற்படுகின்றதோ அவ்வப்போது அங்கங்குத்தாமே சென்று அவ்வப்பணிகளைச் செய்து குறைகளைப்போக்க முன்வரவேண்டும். பலர்க்கு இவ்வெண்ணம் உண்டாகலாம். ஆனால் சூழ்நிலை வசதி இல்லாமலுமிருக்கும். ஆதலால் சூழ்நிலை வசதியுள்ளவர்கள் சோம்பல் காரணமாக வாளாயிருந்து விடாமல் பணிசெய்வதைத் தங்கடமையாக எண்ணி முன்வந்து செய்யவேண்டும்.

துறவோர்ப்பணி.

இங்கே எடுத்துக்காட்டிய பணிகளனைத்தும் இல்லத்துறைபவர்களே செய்ய வேண்டியவையா யுரிய வாயினும் துறவு நிலை பெற்று வாழ்ந்த பெரியார் பலர் எல்லா உயிர்கட்குமே அன்பு செய்யும் அவா வுடையவராய் 'இறைவனை வேண்டுங்காலத்து "அப்பா நான் வேண்டுதல் கேட்டருள்புரிய வேண்டும். ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயவேண்டும்" என்று குறையிரந்து கூறுகின்றனர் நாட்டு நிலைமையைக்கூர்ந்து நோக்குங்காலத்தும் இன்றைய நிலையில் நாடு துறவிகள் தொண்டினையே பெரிதாக மதிக்கிறது. ஆதலினால் இல்லறத்தார்போலத் துறவிகள்கூடத் தங்கள் தங்கள் தகுதிக்கேற்பப் பொதுப்பணிகளிலீடுபடுவதும் வேண்டற்பாலதே யாம் துறவிகளைப்பற்றிப்பலர் குறைவாக எண்ணினாலும்கூட இன்றும் ஆங்காங்கு தவசிரேஷ்டர்களாகப் பலர் இருந்து வருவதனாற்றான் உலகமும் அழிவுபாடுறாமல் நிலைபெற்று வருகின்றது. ஆதலினால் அந்நெறி நிற்கும் அவர்கள் அந்நெறி நின்று வருதலே இவ்வுலகத்தார்க்குச்செய்யும் பெருந்தொண்டாகும்.

இவர்களல்லாமல் சித்தாந்த வேதாந்த சாத்திர நூல்களை ஐயந்திரிபறக்கற்று விளங்கும் துறவு நிலையுற்ற பெரியார்கள் தாம் கற்ற நூற்பொருளைப் பாடம கற்பித்தல் பிரசங்கம் செய்தல் முதலிய வகைகளில் பிறர்க்கும் பயன்பட வாழ்ந்து அவர்கட்கு ஞானவுணர்வு ஊட்டி வரலாம். வேறு சிலர் இலக்கண இலக்கிய தருக்க நூல்களில் வல்லுநராய் விளங்குதலின் அவர்கள் அந்நூல் பயிலும் விருப்புடையவர்கட்குப் போதித்திடலாம். இன்னும் சிலர் வைத்திய நூல் மந்திர நூல்களில் வல்லவராய்த் திகழ்கின்றனராதலின் அவ்விதங்களில் மக்கட்கு நன்மைசெய்ய முன்வரலாம். துறவிகள் பால் வெறுப்புடையவர்கள்கூட இத்தகு பணிகளிலீடு பட்டுள்ளவர்களைக் குறைகூறாது போற்றுகின்றனர். ஆதலின் துறவிகளும், இல்லற நெறியினரும் நாடு முன்னேற்றம் நாட்டு மக்களின் நலம் இவைகளைக் குறித்துத் தொண்டு செய்வதில் முன்னின்று விளங்குவாராக.

தேச மக்கள் வாழ்க! தியாக வுணர்வு நிலைத்திடுக!! சுபம்!!!

யோக சிகோப நிஷத்—தமிழ் பொழிப்புரை.

தவத்திரு. திரிமூர்த்தி சுவாமிகள்,
(ஸ்ரீ சாது சுவாமிகள் ஆஸ்ரமம், பழனி.)

முன் (ம 1 இ 9 ப 1:8) தொடர்ச்சி

இரண்டாம் அத்தியாயம்.

(அ....கை) பண்பட்ட அதிகாரிக்கு யோக ஞானத்தைக் கூறவேண்டு மெனல்:—

சிவபெருமானே! யாதொரு யோகத்தை நன்கு அறிவதாலேயே சூரியனுக்கொப்பான ஒளியைப் பெறுவனே, அத்தகைய மந்திர யொகத்தின் மகிமையை மீண்டுங் கேட்கவிரும்புகின்றேன்.பிரம்மாவே! அதைக் கூறுகின்றேன் கேட்பாயாக எந்தமாணவன் பன்னிரண் டாண்டு சோம்பலின்றி குரு பணி செய்கின்றவனாய் பிரம்மசர்யம் புலனெடுக்க முதலிய நற்குணமுள்ளவனோ, அவன் பொருட்டு ஆசிரியன் இந்த உண்மையான யோக நெறியைக் கூற வேண்டும். அவ்வாறின்றி பெருமையை விரும்பியாவது பொருளிச் சையாலாவது மறதியாலாவது, கூறத்தக்கதன்று. முயன்று மறைத்து இந்த வித்தை காக்கத்தக்கது. குருவால் உபதேசித் தருளிய மூலமந்திரத்தை எந்த அறிஞன் விளக்கமுற அறிவனோ அவன் எல்லாங் கற்றவன். அவன் எல்லாங் கேட்டவன் அவனே எல்லாஞ் செய்து முடித்தவன் என்று அறிக. (4)

(அ....கை) பிரணவ மூலமந்திரத்தின் மகிமையைக் கூறல்.-

பிரம்மாவே! பிரணவவடிவ மூலமந்திரம் மூலாதாரத்தினின்றும் வெளிப்பட்டது. அதுசிவசக்தி வடிவமானது. அந்த மூலமந்திரத்தைச் சொல்பவனும் அரிது. இந்தப்பிரணவமானது எனது வடிவமென்றும் நாதலிங்க மென்றும், பீட மென்றுஞ் சொல்லப்படுகிறது. அதன் சிறப்பை அறிவதால் மனிதன் ஜீவன் முக்தனாகின்றான். அவனுக்கு அணிமா முதலிய எட்டு ஐஸ்வரியமும் விரைவில் உண்டாகின்றது.'(7)

(அ....கை) மூலமந்திர மென்பதின் விளக்கங் கூறல்;—

பிரம்மாவே! இந்தப் பிரணவமானது எனது வடிவத்தை அறிவிப் பதாலும், எல்லாவற்றின் உள்ளிருந்து இயக்குவதாலும், முக்தி விருப் புள்ளவர்கள். மனனஞ் செய்வதாலும், என்னையே நிலைக்களனகப் பெற்று விளங்குவதாலும், மூலமந்திர மென்று சொல்லப்படுகின்றது. மற்றும் மூலாதாரத்திலிருந்து தோன்றுவதாலும், எல்லா மந்திரங் களும் உண்டாதற்கு மூலமாயிருப்பதாலும், மூலவடிவ லிங்கமாயிருப் பதாலும், மூலமந்திரமென்று கருதப்படுகிறது. (8)

(அ....கை) நாதலிங்க மென்பதின் விளக்கங் கூறல்:—

பிரணவமாகிய நாதலிங்கமானது:- செவிக்கேயன்றி மற்றைய பொறிகட்குப் புலனுகாது நுட்பமாயிருப்பதாலும், எல்லா வொலி களுந் தோன்றுதற் கிடமாயிருப்பதாலும், எல்லா வொலிகளேயுந் தனனிடத்தே ஒடுக்கிக் கொள்வதாலும், தானெல்லா வொலிகளிலுங் கலந்து நிற்பதாலும், முதற் பொருளாகிய பரசிவனே அறிவிப்ப தாலும், நாதலிங்கமென்று சொல்லப்படுகிறது. (9)

(அ....கை) பிரணவ சூத்திரமென்பதின் விளக்கங் கூறல்:-

பிரணவ சூத்திரமாவது:- எல்லாவுயிர்களிலும் தொடர்ந்து நிற் பதாலும், மிகவும் அண்மையில் இருப்பதாலும், உருவத்தை நன்கு அறிவிப்பதாலும், சூத்திரமென்று சொல்லப்படுகிறது. (10)

(அ....கை) பிரணவமே பிந்துவாகவும் பீடமாகவும் உளதெனக் கூறல்:—

யாதொரு பிரணவவடிவ பிரகிருதியால் உலகந் தோற்றமுறுகின் றதோ, அதுவே, துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி, என்ற மகாசக்திகளே ஒடுக்கி நின்ற, ஆதார சக்தி என்றும், அவ்வியக்த சக்தி என்றுஞ் சொல்லப்படுகிறது, தோற்ற வொடுக்கங்கட்கு இடமாயுள்ள அச்சூக் கும சக்தியானது பிந்துவாகவும், காமகிரி முதலிய பீடமாகவும் உளது. என்று அறிக, (12)'

(அ....கை) அந்த ஒப்புயர்வற்ற பிரணவோபதேசத்தால் பிரம்ம ஞானத்தினடைவைக் கூறல் :-

பிரம்மாவே! மாணவன் இவ்வாறு குரு உபதேசத்தாலும் சண்முகி முத்திரையைப் பயில்வதாலும், பிராணனேடு பிரணவத்தைத் தொ- டர்ந்து உச்சரிப்பதாலும், பிந்துவையும், பீடத்தையும், உடைத்துச் சென்று நாதலிங்கத்தை அடைகின்முன். அப்பொழுதே அவனுக்கு பிரம்ம விளக்கம் உளதாகின்றது. (14)

(அ....கை) அவ்விடத்து பிரம்மம் மூன்று பிரிவாய் விளங் குமெனக் கூறல்:—

பிரணவமாகிய பிரம்மம்:- தூல, சூக்கும, பர, மென மூன்று பிரிவாய் விளக்க முறுகின்றது. அதன் தூலவடிவமானது-விராட் டென்றும் (பிரம்மா. விஷ்ணு உருத்திரன், மகேசன், சதாசிவனுகிய) பஞ்சப் பிரம்ம வடிவென்றும், சூக்குமமானது:- ஹிரண்ய கற்ப மென்றும், பரமானது;- நாதமென்றுஞ் சொல்லப்படுகிறது. அதுவே பிரணவத்தின் அகார முதலிய பீஜத்திரய வடிவமென்று அறியவும்.

(தொடரும்) (15)

புத்தக விளம்பரம்.

* * *

ஸ்ரீ ஆத்துமானந்த விளக்கம்
மூலமும் உரையும் (காலிகோ பயிண்டு) .... 2—0—0

ஷை புத்தகம் (ராப்பர் பயிண்டு .... 1—4—0

நித்தியாநித்தியவஸ்து விவேகம்
வசன வடிவம் 0-12-0

திருப்போரூர் ஸ்ரீ சிதம்பர தேசிகரந்தாதி
மூலமும் உரையும் .... 0—6—0

மேற்கண்ட புத்தகங்கள் கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஆத்துமானந்த ஆச்சிரமம்,

திலகபுரம் ரோட்டுத் தெரு,
அம்பாசமுத்திரம் (S. Ry.)

கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்-630 307

REGD. No. M. **6630**.

அச்சுரிமை: ந. வேணுகோபாலன் ஸ்ரீ ஜயலக்ஷ்மி பிரஸ், திருவண்ணுமலை
ஆசிரியரும், வெளியிடுபவரும்: சுவாமி சொருபானந்தா, கீழ்ப்பாலூர்.